இலங்கை நிலவரம் : அறிக்கை

# யுத்தத்திற்குப்பின்னரான அரசியலில் ஊடகசுதந்திரம் ஒரு புறக்கணிக்கப்பட்ட பரிமாணம்

இலங்கையில் ஊடகசுதந்திரம் என்பது அரசியலில் ஒரு புறக்கணிக்கப்பட்ட பரிமாணமாக யுத்தத்துக்குப்பின்னரான சூழ்நிலையில்

காணப்படுவதை சர்வதேச ஊடக நிறுவனம், (International Federation of Journalists) அதன் இணைப்பாளர்களுடன் கடந்த சில மாதங்களில் நடத்திய கலந்தாலோசனைகளில் தெரியவந்துள்ளது. 2009 ஆம் ஆண்டு மே மாதத்தில் இலங்கையில் யுத்தம் முடிவுக்கு வந்தது. அன்றிலிருந்து விரிவான கண்ணோட்டத்தில் நோக்கும்போது, சமாதானத்தின் பயன்பாடுகள் குறித்த நம்பிக்கைகள் அருகிவருவதையே அறியமுடிவதோடு, நாட்டின் ஊடகவியலாளர்கள் தொடர்ச்சியாக மிக நெருக்கடியான பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கவேண்டியவர்களாகவும் காணப்படுகின்றனர். ஒளிவு - மறைவாகவும், அந்தரங்கமாகவும் பேசுகின்ற தன்மை யுத்தகாலத்தைவிடக் குறைவடைந்துள்ளது. ஆனால் பேச்சுச் சுதந்திரமென்பது, ஊடகச் சூழலில் பாதிப்புக்குள்ளாகும் அச்சம் ஏற்பட்டுள்ளதையும். இது விடயத்தில் மாறுபாடான கருத்துக்களை மௌனிக்கவைப்பதற்கு அரசியல் மற்றும் பணபலம் பிரயோகிக்கப்படுவதாக இருக்கின்றது.

இதேவேளை ஏனைய துறைகளிலும் குழப்பமான தன்மை நிலவுகின்றது. அண்மையில் விரிவுரையாளர்களின் மூன்றுமாதகால வேலைநிறுத்தம் நாட்டில் பல்கலைக்கழகங்களை மூடவைத்திருந்தது. ஆசிரிய சமூகத்துக்கான சம்பளப்பற்றாக்குறை, மற்றும் அவர்களது தொழில்சார்ந்த பிரச்சினைகள் சம்பந்தமாகவே வேலைநிறுத்தம் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. ஆனால் கடந்தகாலங்களில் மிக உன்னதமான நிலையிலிருந்த இலங்கையின் கல்வித்துறையில் தொடர்ச்சியாக ஏற்பட்டுவரும் பாதிப்புக்கள் பல்கலைக்கழக ஆசிரியர்களின் வேலைநிறுத்தத்துக்கான பிரதான காரணமாக

அமைந்திருந்தது.

பல்கலைக்கழக விரிவுரையாளர்களது வேலை நிறுத்தம் மூன்றாவது மாதத்தினுள் நுழைந்தபோது, உத்தியோக பூர்வ பேச்சாளர்கள் அரச ஊடகங்கள் மீதான தமது ஆதிக்கத்ததைப்பயன்படுத்தி, ஜனநாயகரீதியாகத் தெரிவுசெய்யப்பட்ட அரசாங்கத்தைக் கவிழ்க்கவும் கால்நூற்றாண்டுகாலமாக இடம்பெற்ற உள்நாட்டு யுத்தத்தின் வெற்றிகளையுப் புறந்தள்ளி விடவுமே வேலைநிறுத்தம் மேற்கொள்ளப்படுவதாக தெரிவித்திருந்தனர்.

பல்கலைக்கழகத்தின் ஆசரியர் சம்மேளனத்தின் (FUTA) தலைமைத்துவநிலையிலிருந்த குறித்த சில உயர்ந்ததரத்திலான பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சதித்திட்டக்காரர்களாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தனர்.

பல்கலைக்கழக ஆசிரியசங்கத்தின் ஆதரவையும் பெற்றிருந்தது. இந்நடவடிக்கை யுத்தத்துக்குப்பின்னரான இலங்கைச் சமூகத்தில் ஏற்படக்கூடிய அதிருப்திகளை வெளிப்படுத்துவதாக அமைந்திருந்தது. இலங்கையின் அரச நிறுவனமான இலங்கை.

மின்சாரசபை ஊழியர்கள் தமது சம்பளப்பிரச்சினை தொடர்பாகவும் கடந்த சிலவாரங்களில் எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தனர். மின்சாரத்துறையினரின் தொழிற்சங்க நடவடிக்கை நாட்டின் சில பகுதிகளில் மின்சாரத்தையும் துண்டித்துவிட்டிருந்தது. நிதிநிலவரம், பொருளாதார நிலவரம் என்பவற்றிக்கு அப்பாற்பட்ட விதத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் மிக அதிகளவிலான முறையில் துறைமுகங்கள் நெடுஞ்சாலைகள் போன்றவற்றில் முதலீடுகளைச் செய்வதாக நாட்டு நடப்புகளை அவதானிப்போர் கருதுகின்றனர்.

மத்தியவங்கியினால் நிர்வகிப்பப்பட்டு , நீண்டகால அடிப்படையில் பாதுகாப்பாக வைக்கப்படும் ஓய்வூதியக்கணக்குகள், அரசாங்கத்தின் அழுத்தம் காரணமாக வங்கிகள் போன்ற அரச நிறுவனங்களில் பங்குகளை கொள்வனவு செய்யப் பயன்படுத்தப்படுகின்றது. அரசாங்கத்தின் அதிகார விரிவாக்கம் அதன் பொருளாதார நிலைப்பாடுகள் ஊடாகவும் வலுவடைந்ததாக இருக்கின்றது. பத்திரிகைத்துறையின் ஆசிரிய பீடத்தைக்கட்டுப்படுத்தும் வகையில்

அரசாங்கத்தினால் பத்திரிகை விளம்பரங்கள் வழங்கப்படுகின்றன. ஆளுங்கட்சியின் விருப்பத்துக்கிணங்க ஊடக நிருவனங்களும் பணப்பலம் மூலமாக நேரடியாக கையகப்படுத்தப்படுகின்றன. ஊடகத்துறையினரும் சவால்களை எதிர்நோக்கியவர்களாக இருக்கின்றனர். தமிழ் மக்கள் சார்பாக தமது கருத்துக்களை வெளியிட முன்வருகின்ற சில பத்திரிகை நிறுவனங்களும் பயங்கரவாதத்திற்கு சார்பானவை அல்லது துரோகத்தனமானவை எனக் கருதப்படுகின்றன.

ஊடகத்துறையிலும் இடர்பாடுகளைக் கடந்து அகலக்கால் பதிக்க முடியாத நிலையும, நேர்த்தியான ஒரு போக்கை கடைப்பிடிக்க முடியாத நிலை அரசாங்கத்தின் அழுத்தம் காரணமாக நிலவுகின்றது . ஊடக நிறுவன உரிமை, மற்றும் விளம்பர அனுகூலங்கள் என்பவை அழுத்தங்கள் தொடர்பில் முக்கிய காரணிகளாக அமைகின்றன.

தேசிய நல்லிணக்கத்துக்கு ஊடக சுதந்திரம் ஒரு காரணியாக அமைகின்றது.

ஜுலை 2012 ஆம் ஆண்டு அரசாங்கம் தேசிய நல்லிணக்கம் தொடர்பான ஆணைக்குழுவின் சிபார்சுகளை அமுலாக்க தேசிய செயல்திட்டமொன்றை அறிவித்திருந்தது. யுத்தம் முடிவுற்று ஒரு வருடத்தின் பின்னர் ஜனாதிபதியின் ஆணைக்கமைய கற்றுக்கொண்ட பாடங்களும் நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழு அமைக்கப்பட்டது. ஆரம்பத்தின் இவ் ஆணைக்குழுவின் செயற்பாடுகள் பற்றி அவநம்பிக்கையான நிலைகாணப்பட்டபோதிலும், யுத்தத்தின் இறுதி வருடங்களின்போது, வடக்கே மக்களுக்கு ஏற்பட்ட துயரங்கள் பற்றிய பல்வேறு தகவல்களையும் வெளிப்படுத்துவதாக இவ் ஆணைக்குழுவின் நடவடிக்கை அமைந்திருந்தது. 2011 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 400 பக்கங்களுக்கும் அதிகமான அறிக்கையொன்றை நல்லிணக்க ஆணைக்குழு சமர்ப்பித்திருந்தபோதிலும், இரு பக்கங்களுக்கு அதிகமாக எதனையும் ஊடகங்கள் பற்றி அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. ஆயினும் ஊடகம் தொடர்பில் தெரிவிக்கப்பட்ட மிகச்சில சிபார்சுகள், ஆழமான கண்ணோட்டத்ததைக் கொண்டவையாக அமைந்திருந்தன.

ஊடக நிறுவனங்கள் மீதும், ஊடகவியலாளர்கள் மீதும் , தாக்குதல்கள்

நடத்தப்படுவதை தடுக்கவேண்டுமென ஆணைக்குழு தெரிவித்திருந்ததோடு, கடந்த காலங்களில் ஊடகத்துறைமீது நடத்தப்பட்ட தாக்குதல்கள் பற்றி விசாரணை செய்து தகுந்த தண்டனைகள் வழங்கப்படவேண்டுமெனவும் சிபார்சு செய்திருந்தது.

அத்துடன் ஊடகவியலாளர்கள் சுதந்திரமாக நடமாடுவதை உறுதிசெய்ய வேண்டுமெனவும் விபார்சு செய்யப்பட்டிருந்ததுடன் தகவல் அறியும் உரிமைச்சட்டம் அமுலாக்கப்படுவதன் அவசியமும் சிபார்சுகளில் குறிப்பிடப்பட்டிருந்தது.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழுவின் ஊடகத்துறைபற்றிய அவதானங்கள் முக்கியமானவை . அவைபற்றிக் குறிப்பிடப்படவேண்டியதும் அவசியமானதாகின்றது.

கருத்துச் சுதந்திரம் தகவலறிவதற்கான உரிமை என்பவை சர்வதேச ரீதியாக அடிப்படை மனித உரிமைகளாகக் கருதப்படுவதுடன் எந்தவொரு நல்லிணக்க விடயங்களிலும் முக்கிய பங்களிப்பை இவையிரண்டும் வழங்குபவையாக இருக்கின்றன. எனவே ஊடக சுதந்திரத்தை ஜனநாயக விழுமியங்களின் அடிப்படையில் மேம்படுத்துவதுடன் அடிப்படை உரிமைகளுக்கு அமைவாக பாதுகாப்பது அவசியமாகின்றது. ஊடகத்துறையில் கட்டுப்பாடுகளைக் கொண்டுவருவது, பல்வேறு இனங்கள் மத்தியில் அவநம்பிக்கை, அச்சஉணர்வு என்பவற்றை ஏற்படுத்தவே வழியமைக்கும்.

இத்தகைய தன்மை நல்லிணக்க ஏற்பாடுகளின் அழுத்தங்களை பிரயோகிப்பதுடன் ஆக்கபூர்வமான கருத்துப்பரிமாற்றம், அபிப்பிராயங்களின் வெளிப்பாடு என்பவற்றையும் பாதிப்படைய வைப்பதாக அமையும .

(அ) ஊடகவியலாளர்கள் மீதும் ஊடகநிறுவனங்கள் மீதும் மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள், அழுத்தங்கள் என்பவற்றை தவிர்ப்பதற்கான தண்டனைகள் வழங்கப்படவேண்டும். பாதகமான செய்லகள் பற்றிய விசாரணைகள், சட்டநடவடிக்கை, போன்றவற்றை மேற்கொண்டு குற்றவியல் சட்டத்தில் நம்பிக்கையை ஏற்படுத்தும் விதத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும .

(இ) கடந்தகால குற்றச்சம்பவங்கள் தகுந்தமுறையில் விசாரிக்கப்படவேண்டும. அண்மைக்காலங்களில் அதிகளவான ஊடகவியலாளர்கள், ஊடகநிறுவனங்கள் தாக்கப்பட்டுள்ளதை நல்லிணக்க ஆணைக்குழு கவனத்தில் கொண்டுள்ளது. எனவே கடந்த காலங்களில் ஊடகத்துறைக்கு எதிரான சம்பவங்கள் பற்றிய விசாரணைகள் துரிதப்படுத்தப்பட்டு சம்பந்தப்பட்டவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டுமென்பதை ஆணைக்குழு சிபார்சு செய்துள்ளது.

(ஈ) வடக்கு - கிழக்குப் பிரதேசங்களில் ஊடகவியலாளர்களது சுதந்திர நடமாட்டத்தை உறுதிசெய்வதன் மூலம் தகவல் பரிமாற்றம் மற்றும் நல்லிணக்கத்துக்கதன பங்களிப்பை அரசாங்கம் பலப்படுத்தவேண்டும்.

(உ) தகவல் அறியும் உரிமைக்கான சட்டமூலம் கொண்டுவரப்படவேண்டும்.

மேற்குறிப்பிட்டவை தெளிவான முறையில் குறிப்பிடப்பட்டுள்ளபோதிலும், கால அவகாசம் எதுவும் தகவல் அறியும் உரிமைச்சட்டம் பற்றி தேசிய செயல்திட்டத்தில் குறிப்பிடப்படாதிருப்பதை சர்வதேச ஊடகவியலாளர்கள் சம்மௌனமும் அதன் இணைப்பாளர்களும் தமது அவதானத்தை வெளியிட்டுள்ளனர். ஊடகத்துறை மீதான தாக்குதல்கள் பற்றியும் குறிப்பிடப்படாதிருப்பதோடு, வெளிப்படைத்தன்மையான நிர்வாகம் ஊடகத்துறையினரது சுதந்திர நடமாட்டம் என்பவையும் குறைந்தபட்ச கவனத்தைப் பெற்றனவையான உள்ளன.

இத்தருணத்தில் தேசிய செயல்திட்டம் பற்றியும் 2011 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் அறிவிக்கப்பட்ட மனித உரிமைகள் பாதுகாப்பும், மேம்பாடும் எனத்தலைப்பிடப்பட்ட செயல்திட்டம் குறித்தும் தெளிவற்ற தன்மை காணப்படுகின்றது.

மனித உரிமைகள் பாதுகாப்புக்கும், மேம்பாட்டுக்குமான (NHRAP) செயல்திட்டமானது இலங்கை அரசாங்கத்தினால் மே 2008 ஆம் ஆண்டில் ஐக்கியநாடுகள் ஸ்தாபன மனித உரிமைகள் கவுன்ஸிலுக்கு வழங்கப்பட்ட காலக்கிரம மதிப்புரையின் உறுதிப்பாடாக அமைந்திருந்தது.

மனித உரிமைகள் பாதுகாப்புக்கும் மேம்பாட்டுக்குமான செயல்திட்டத்தில் ஊடக சுதந்திரம் குறித்து நேரடியான அம்சங்கள் முக்கிய செயற்பாடுகளாக

அமைந்துள்ளன. இவற்றில் தகவல் அறியும் உரிமைச்சட்டத்தை ஒரு வருடத்தில் அறிமுகப்படுத்தல், உத்தியோகபூர்வ அந்தரங்க சட்டமூலத்தின் மதிப்புரையை ஆறுமாதகாலத்தில் கொண்டுவருதல், ஒரு மாதகாலத்தில் இணையத்தள அணுகுமுறை குறித்த விரிவான சட்டவரையைக் கொண்டுவருதல் என்பவை அடங்குகின்றன. ஆனால் இத்தகைய நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. ஆயினும் இவற்றுக்குமாறுபாடான முறையில் நடவடிக்கைகள் இடம்பெற்றிருந்தமையை இந்த அறிக்கை அதன் இறுதிப்பாகத்தில் கொண்டிருக்கின்றது. ஒழுங்கமைப்பற்ற விதிமுறைகளை இணையத்தளங்களை பதிவுசெய்வது தொடர்பாகவும் தெளிவான சட்டவரையறை மற்றும் அரசியலமைப்பு அங்கீகாரமற்றதாகவுமே செயற்பாடுகள் அமைந்துள்ளன.

இதேபோல தகவல் அறியும் உரிமைக்கான இலங்கை அரசின் நிலைப்பாடும் முரண்பட்டதாகவே அமைந்திருந்தது. ஜுன் 2011 ஆம் ஆண்டு ஆளும்கட்சி தனது பலமான பாராளுமன்ற பிரதிநிதித்துவம் மூலமாக பிரதி எதிர்க்கட்சித் தலைவரினால் ஒரு தனிநபர் பிரேரணையாகக் கொண்டுவரப்பட்ட தகவல் அறியும் உரிமைச்சட்ட மசோதாவையும் தோற்கடித்தமை குறிப்பிடத்தக்கது . மனித உரிமைகள் பாதுகாப்புக்கும், மேம்பாட்டுக்குமான செயல்திட்டம், மற்றும் தேசிய செயல்திட்டம் ஆகியவற்றின் அறிவிப்புகளுக்கு மத்தியிலும் இலங்கை அரசியல் தலைமைத்துவத்திடம், நடைமுறைச் சாத்தியமாக எதுவும் காணப்பட்டிருக்கவில்லை.

## உறுதியாக்கப்பட்ட சுதந்திர நடமாட்டம் நடைமுறையில் இல்லை.

2012 செப்டெம்பர் மாதம் இறுதிப்பகுதியில் இலங்கை அரசாங்கம், இடம்பெயர்ந்த மக்களுக்கென நாட்டின் வடக்கே வவுனியாவில் அமைக்கப்பட்ட மெனிக்பாம் முகாமை மூடிவிடுவதாக அறிவித்திருந்தது. வவுனியா வன்னிப்பிராந்தியத்தில் உள்ள நான்கு மாவட்டங்களில் ஒன்றாகும். யுத்தத்தின் இறுதிக்கட்டத்தின் மோசமான வடுக்களைத் தாங்கிய பிரதேசமாகவே வவுனியா விளங்கியது. யுத்தம் முடிவுற்றதன் பின்னரான மாதங்களில் அடிப்படை வசதிக்குறைபாடுகளுடன், உயிருக்குப்பயந்த

நிலையிலும் 300,000 இடம்பெயர்ந்த மக்கள் இந்த முகாமில் இருந்தனர். 2010 ஆம் ஆண்டின் ஆரம்பப்பகுதியில்,மெனிக்பாம் முகாமில் இருந்த இடம்பெயர்ந்த மக்களை உலகளாவிய ரீதியில் கண்டனங்கள் தலைகாட்ட ஆரம்பித்ததையடுத்து அவர்களது சொந்த வீடுகளுக்குச் செல்ல இலங்கை அரசு அனுமதித்தது. அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ அறிவிப்புகள் இதுபற்றித்தெரிவிக்கையில் பலவருடகாலமாக நிலவிய இனரீதியான வெறுப்புணர்வுகள், உயிரிழப்புகள் என்பவற்றை தவிர்த்து நாட்டில் சகஜநிலையை ஏற்படுத்தும் விதத்திலேயே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

ஆயினும் இலங்கையின் ஊடகத்துறையில் இந்நடவடிக்கை பற்றி நுணுக்கமாக ஆராய்ந்த தரப்பினர். வவுனியா இடம்பெயர்ந்தோர் முகாமிலிருந்து வெளியேற்றப்பட்டோர், மீளவும் தமது சொந்த இடங்களில் சென்று வாழ்வதற்கான உரிய வசதிகள் இல்லாதிருப்பதைச் சுட்டிக்காட்டியிருந்தனர். அத்துடன் தாம் முன்பிருந்த தமது நிலபுலன்கள் பற்றிய தெளிவான வரையறையையும் இல்லாதிருப்பதை அறிந்திருந்தனர். வடக்கே தீவிரமான முறையில் இராணுவரீதியான குடியமர்வுகள் முன்னெடுக்கப்படுவதையும் அவர்களால் அறியமுடிந்தது. இந்நடவடிக்கை தேசிய பாதுகாப்பை கருத்தில் கொண்டதாகவே தெரிவிக்கப்பட்டிருந்தது.

2012 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதமளவில் 1200 க்கும் குறைவானவர்களே மெனிக்பாம் முகாமில் தங்கியிருந்தனர். மெனிக்பாம் முகாம் மூடப்பட்டமை ஒரு முக்கிய மைல் கல்லாக உத்தியோக பூர்வமாக விபரிக்கப்பட்ட போதிலும், அம்முகாம் மூடப்பட்டதன் பின்னணி வேறொருநோக்கத்தையே கொண்டதாக அமைந்திருந்தது. அக்டோபர் மாத இறுதிப்பகுதியில் ஐக்கியநாடுகள் ஸ்தாபன மனித உரிமைகள் கவுன்ஸிலின் பூகோள காலக்கிரம மீளாய்வுக்காகத் தயாராகும் வகையில் ஒரு பகட்டுத்தனமான ஏற்பாடாகவே இந்நடவடிக்கை அமைந்திருந்தது. யுத்தத்துக்குப்பின்னர் விரிவாக அமைக்கப்பட்ட இடம்பெயர்ந்தோர் முகாமிலிருந்து மக்கள் அப்புறப்படுத்தப்பட்டபோதிலும் மீளக்குடியமர்த்தப்பட்ட மக்களின் வாழ்க்கைத்தரம், வாழ்வாதாரம் என்பவை பற்றி பலகேள்விகள் விடைகாணப்படாதவையாக இருந்தன.

இலங்கை அரசாங்கம் மெனிக்பாம் முகாமை மூடிவிடப்போவதாக அறிவிக்கப்பட்டதுமே ஆங்கிலப்பத்திரிகையான சிலோன் ரூடேயின் (Ceylon today) செய்தியாளர் குழுவொன்று வவுனியாவுக்குச் சென்று, போருக்குப்பின்னரான மீள்குடியமர்த்தும் நடவடிக்கைகள் பற்றிய செய்திகளை சேகரித்திருந்தது. மெனிக்பாம் நடவடிக்கைகளுக்குப் பின்னரான நிச்சயமற்ற தன்மை, மற்றும் வன்னிப்பகுதியில் காணப்பட்ட அதே இராணுவப் பிரசன்னம் பற்றி நிறையவே குறிப்பிடப்படவேண்டியதை அச்செய்தியாளர் குழு அறிந்திருந்தது. யுத்தத்துக்குப்பின்னரான இலங்கையில் மீளக்குடியமர்த்தப்பட்டவர்கள் பற்றிய தகவல்கள் மிகவும் மோசமானதாக இருப்பதையும் அச்செய்தியாளர் குழு அறிந்திருந்தது. மெனிக்பாம் மூடப்பட்டது சம்பந்தமான தகவல்களை ஆவணப்படுத்துவதற்குச் சென்ற செய்தியாளர்கள் குழு சந்தித்த இடையூறுகள் நேரடி அனுபவமாக பின்வரும் முறையில் தரப்பட்டிருந்தது.

பல்வேறு அமைப்புகள் பலதரப்பட்ட வியாக்கியானங்களை தந்தபோதிலும் முல்லைத்தீவு மாவட்டத்தின் சீனியா மொட்டையில் இடம்பெறுபவை மிகவும் பாதுகாக்கப்பட்ட இரகசியமாக இருக்கின்றது. இதில் முக்கியமானதென்னவென்றால் அப்பிரதேச மக்கள் பத்திரிகையாளருடன் பேசுவதற்கு அனுமதிக்கப்படவில்லை பலம்மிக்க பாதுகாப்பமைச்சின் அனுமதியளிக்கப்பட்ட பத்திரிகையாளர்கள் மட்டுமே அங்கு செல்லமுடியும்.

ஒரு சுமூகமான வரவேற்புக்கு அங்கு இடமிருக்கவில்லை. அத்துடன் மீளக்குடியமர்த்தல் என்பது அவசர அவசரமாக மேற்கொள்ளப்பட்ட ஒரு நடவடிக்கையாக அமைந்திருந்தது.

ஒரு நலன்புரி முகாமுக்குள் பார்ப்பதற்கு எதுவும் இல்லை என எமக்கு கடுமையான தொனியில் தெரிவிக்கப்பட்டது. அதுகுறித்து அதிகம் கரிசனைப்படத்தேவையில்லை எனவும் கூறப்பட்டது. இராணுவப்பிரசன்னமே அதிகம் காணப்பட்டதுடன், ஒரு முகாமுக்கு வேண்டிய குறியீடுகள் அங்கு அச்சமயம் போடப்படுவதாக இருந்தது.

“வேறெங்காவது செல்லுங்கள். பிரபாகரனின் நீச்சல் தடாகத்தைப் போய்ப்பாருங்கள் இங்கு உங்களுக்கு எதுவும் இல்லை’’ என்று ஒரு இளம்

அதிகாரி தெரிவித்தார். இத்தகைய நடைமுறை, தகவல்களை பரிமாற மறுத்தமை, அரசாங்கம் தெரிவிக்கின்ற வெளிப்படைத்தன்மை, மீளக்குடியமர்ந்த மக்கள் எவரும் இல்லை. சுயமாக எங்கும் நடமாடலாம் என்று கொழும்பில் அரசாங்கம் தெரிவித்தமைக்கு எதிர்மாறாக இருப்பதையே அவதானிக்கமுடிந்தது.

சீனியாமொட்டைக்கான பயணமும்,அங்கு தகவல் அறிவதில் காணப்பட்ட இடையூறுகளும் யுத்தம் முடிவுற்ற காலப்பகுதியிலும், மீளக்குடியேற்றம், யுத்தத்துடன் சம்பந்தப்பட்ட வேறுவிடயங்களும் அணுகப்படமுடியாதவையாக இருப்பதையே உணரமுடிந்தது. எனவே சீனியாமொட்டை விவகாரம் கலந்துரையாடலுக்கான ஓர் விடயமாக இருக்கவில்லை. எமக்கு புதிய நலன்புரி முகாமுக்குள் செல்ல அனுமதி மறுக்கப்பட்டமை ஆச்சரியத்துக்குரியதாக இருக்கவில்லை. ஏனெனில் மீளக்குடியமர்த்தப்பட்டவர்களுக்கு அவர்கள் இருப்பதற்கு அனுமதிக்கப்பட்ட இடத்தில் குடிநீர், மின்சாரம், சமைத்த உணவு ஆகியவை காணப்படவில்லை. புதன்கிழமை பெய்த மழை மீளக்குடியமர்ந்தவர்களை மழைநீரில் பெரிதும் நனையவிட்டிருந்தது. அவர்களுக்கான கூடாரங்களும் போதுமானவையாக இருக்கவில்லை.

இதையொத்த அனுபவத்தை லங்கா ஸ்டான்டர்ட் செய்திச்சேவை செய்தியாளரும் வன்னிக்குச்சென்று உத்தியோகபூர்வமாக மீளக்குடியமர்த்தப்படுவது பற்றிக் கூறப்படுவை உண்மையானவை என்பது பற்றித் தெரிவித்திருந்தார்.

முல்லைத்தீவு இராணுவ தலைமையகத்துக்கு அருகே அமைந்திருந்த சூரியபுரம் முகாம் ஒரு தொகை இராணுவவீரர்களால் மிகவும் பாதுகாக்கப்பட்டிருந்ததோடு, ஊடகவியலாளர்கள் அங்கே மீளக்குடியேறியவர்களைப் பார்ப்பதற்கு அனுமதிக்கப்பட்டவில்லை. உண்மைகள் வெளிப்படுத்தப்பட்டுவிடுமென்பதே இதற்கான முக்கியகாரணமாகும். லங்கா ஸ்டான்டர்ட் செய்தியாளர்கள் நந்திக்கடல் பகுதியில் அமைந்துள்ள சூரியபுரம் முகாமுக்கு செப்டெம்பர் மாதம் 26ஆம் திகதி புதன்கிழமை 2012 ஆம் ஆண்டு அங்குள்ளவை பற்றியும் மீள்குடியேற்றத்தின் முன்னேற்றம் பற்றியும் செய்திசேகரிக்கச் சென்றபோது,

இராணுவத்தினர் அவர்களுக்கு அம்முகாமுக்குச் செல்ல அனுமதிக்கவில்லை. சோதனைச்சாவடியில் நின்றிருந்த இராணுவ வீரர்கள் ,முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் அல்லது முல்லைதத்தீவு இராணுவத்தலைமையகத்தின் சிவில்விவகாரப்பிரிவு அதிகாரிகளின் அனுமதி இருந்தால் மட்டுமே மேற்கொண்டு பயணத்தைத் தொடரமுடியுமென்று தெரிவித்தனர். நானும் எனது படப்பிடிப்பாளரும், புதன்கிழமை, வியாழக்கிழமை ஆகிய தினங்களில் முல்லைத்தீவில் நந்திக்கடலில் அமைந்துள்ள சூரியபுரம் முகாமுக்குள் செல்ல ஆயுதமேந்திய இராணுவ அதிகாரிகளால்அனுமதிக்கப்படவில்லை. முகாமிலேயே மெனிக்பாமில் இறுதியாக இருந்த இடம்பெயர்ந்த மக்கள் கொண்டுவரப்பட்டு தங்கவைக்கப்பட்டிருந்தனர்.அரசாங்கம் இம்மக்கள் அவர்களது சொந்த கிராமங்களிலேயே குடியமர்த்தப்பட்டதாக தெரிவித்திருந்தது. இம் முகாமுக்குச் சென்று பார்வையிட அனுமதி மறுக்கப்பட்டதோடல்லாமல், தமக்குப்பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் எதனையும் எழுதவேண்டாமெனவும் படையினர் எச்சரித்திருந்தனர். தற்காலிக முகாமொன்றுக்குன் இருந்து வெளியே வந்த படையதிகாரிகள் அவ்விடத்திருந்தும் அகன்றுவிடுமாறு என்னை கேட்டுக்கொண்டதோடு முகாமைப்பற்றியோ அல்லது இடம்பெயர்ந்த மக்களின் துயரங்கள் பற்றியோ எதனையும் எழுதவேண்டாமெனக் கூறியதோடு என்னை அங்கிருந்து வெளியேறும்படி கூறினார்.

யுத்தத்தின் பின்னரான புனர்வாழ்வு பற்றி நிறையவே சிறப்பாக எழுதக்கூடியதாக இருந்தாலும் ஊடகத்துறை, பாதுகாப்புத்தரப்பிடமிருந்தும் ஏனைய அரச நிறுவனங்களிடமிருந்தும் அழுத்தங்களை எதிர்கொள்வதையே தெளிவாக அறியமுடிந்தது.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு சிபார்சுகளில், ராஜபக்ஷ அரசைப் பொறுத்தவரை இதுவொரு குறைபாடாகவே அமைகிறது. ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்களைப் பொறுத்தவரை ஜீ.குகநாதன் மீது ஏறத்தாள உயிராபத்தை ஏற்படுத்தும் விதத்தில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை கற்றுக்கொண்டபாடங்கள் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழு (எல்.எல்.ஆர்.சி) வெகுவாகவே கண்டித்துள்ளது.

ஜி.குகநாதன், தமிழ் நாளிதல் உதயனின் செய்தியாளராகப் பணிபுரிந்தவர்.

அவருக்கு வயது 59 ஆகும். 29 ஆம் திகதி ஜுலை 2011 ஆம் ஆண்டு மாலை அவர் வீடு திரும்பியபோது இரும்புக்கம்பிகளால் இரு இனந்தெரியாத நபர்களால் தாக்கப்பட்டார். மயக்கமுற்று அபாயகரமான நிலையில் அவர் வீழ்ந்து கிடந்தபோது, வீதியால் சென்றோரால் கொண்டு செல்லப்பட்டு யாழ்ப்பாணம் பொதுவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு அவர் உயிர்காக்கும் இயந்திரம் மூலம் சிகிச்சையளிக்கப்பட்டார்.

**விசாரணையற்ற தன்மைக்கு முடிவில்லை**

வடமாகாணத்தில் தாக்குதல் சம்பவத்துக்கு ஒரு வாரம் முன்னதாக இடம்பெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில், ராஜபக்ஷ அரசை கடுமையாக எதிர்த்து நின்ற தமிழ்தேசியக்கூட்டமைப்பு 23 உள்ளூராட்சி சபைகளில் 18 சபைகளில் வெற்றிபெற்றது. உதயன் பத்திரிகை அரசியல் ரீதியாக தமிழ்தேசிய கூட்டமைப்பை ஆதரிக்கும் கொள்கையை கொண்டுள்ளது. இதுவே உதயன் பத்திரிகையின் சிரேஷ்ட செய்தி ஆசிரியர் மீதான தாக்குதலுக்கான முக்கியகாரணமாக அமைந்திருந்தது. ஒரு சில மாதங்களில் உதயன் அலுவலகத்தைச் சேர்ந்த ஒருவர் மீது நடத்தப்பட்ட இரண்டாவத தாக்குதலாக இது அமைந்திருந்தது. மே28 ஆம் திகதி, கவிதரன் என்ற இப்பத்திரிகையின் செய்தியாளர் இதேபாணியில் அலுவலகத்தை நோக்கிச் சென்றபோது தாக்கப்பட்டார். இதுபற்றி எவ்வித விசாரணைகளும் நடத்தப்படவில்லை.

குகநாதனுக்கும் கவிதரனுக்கும் சுவிற்சலாந்தில் அரசியல் புகலிடம் தற்போது வழங்கப்பட்டுள்ளது.

இந்த இருவர் மீதான தாக்குதலே நீண்டகாலமாக உதயன் பணியாளர்களும், அலுவலகமும் யாழ்ப்பாணத்தில் தாக்கப்பட்டதில் அண்மைக்காலத்தில் நிகழ்ந்தவையாகும். 2006 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் சுடரொளிப் பத்திரிகையின் செய்தியாளரான எஸ்.எஸ்.சுகிர்தராஜன் என்பவர் கிழக்கு மாணாகத்தில் திருகோணமலையில் சுட்டுக்கொல்லப்பட்டிருந்தார்.

சுடரொளிப்பத்திரிகையும், உதயன் பத்திரிகைக்குழுமத்தைச் சேர்ந்ததாகும்.

ஐந்து தமிழ் மாணவர்களை இலங்கையின் ஆயுதப்படையினர் சுட்டுக்கொன்றதை வெளிப்படுத்திய காரணத்தினால் இவர் கொல்லப்பட்டிருந்தார். அதே ஆண்டு மே மாதம், இரு உதயன் ஊழியர்கள் அலுவலகத்தில் வைத்துச்சுட்டுக்கொல்லப்பட்டனர். குகநாதன் கொலையாளிகள் இச்சம்பவத்தில் இலக்கு வைத்திருக்க முடியும். அம்மாத இறுதிப்பகுதியில் உதயன் அலுவலக விநியோக வாகனமொன்று தாக்கப்பட்டது. அதன் சாரதியும் கொல்லப்பட்டார். ஆகஸ்ட் 2006 ஆம் ஆண்டு மற்றொரு தாக்குதல் உதயன் அலுவலகத்தில் நடத்தப்பட்டது. ஏப்ரல் 2007 ஆம் ஆண்டு எஸ் ரஜீவர்மன் என்ற உதயன் செய்தியாளர், வடக்கே காணாமல் போவோர் சம்பந்தமாக செய்திகளைத் தந்தமையால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

2012 ஆம் ஆண்டு ஜனவரி மாதம், இலங்கைக்கான அமெரிக்கத்தூதுவருக்கு ஒரு ராஜதந்திர கேபிள் தகவல் வெளிச்சத்துக்கு வந்திருந்தது.அதில் 2006 ஆம் அண்டு அக்டோபர் மாதம் 4 ஆம் திகதி ஜனாதிபதியின் சகோதரரும் அவரது சிரேஷ்ட ஆலோசகருமான பஸில் ராஜபக்ஷ ”ஆச்சரியமளிக்கும் விதத்தில் ” நிகழ்த்திய முக்கிய உரையாடல் பதிவாகியிருந்தது. அதில் இலங்கை இராணுவமும், பொலிஸாரும் இணைந்த விசேட அதிரடிப் படையினரால் அந்த ஐந்து மாணவர்களது கொலைகளும் திருகோணமலையில் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. பஸில் ராஜபக்ஷவின் இந்த ஆச்சரியத்துக்குரிய ஒப்புதல் உரையாடல் என்பது இராஜதந்திர நடைமுறையில் அண்மைக்காலங்களில் ஒரு அரிய நிகழ்வாக அமைந்திருந்தது. அவர் இரகசியத்தன்மையை பேணியபோதிலும் அந்த உரையாடல் பதிவு செய்யப்பட்டிருந்தது. இதே உரையாடலில், ஜனாதிபதியின் நெருங்கிய சகாக்களான டக்ளஸ் தேவானந்தா, விநாயகமூர்த்தி முரளிதரன் (கேர்ணல் கருணா) ஆகியோர் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் ஆயுதமேந்திய அவர்களது உறுப்பினர் மூலமாக அரசியல் நடவடிக்கைகளில் பிரச்சினைகளை ஏற்படுத்துவதாகவும் கூறப்பட்டமை பதிவு செய்யப்பட்டிருந்தது உதயன் அலுவலகத்தில் ஆகஸ்ட் மாதத்தில் நடத்தப்பட்ட தாக்குதல் தேவானந்தாவின் அரசியல் கட்சியின் ஒரு நடவடிக்கை எனவும், ஸ்ரீலங்கா கடற்படையில் உள்ள சில சக்திகள் மூலமாக இத்தாக்குதல்

நடத்தப்பட்டிருக்கலாமெனவும் பஸில் ராஜபக்ஷ தெரிவித்திருந்தார்.

திருகோணமலை சம்பவம் இடம்பெற்றபோது, சுடர்ஓளிப் பத்திரிகையின் ஆசிரியராக என் வித்தியாதரன் பணிபுரிந்தார். திருகோணமலையில் கொல்லப்பட்ட ஐந்து மாணவர்களும் குண்டொன்றை உருவாக்கும்போது ஏற்ப்பட்ட விபத்தில் கொல்லப்படவில்லை என்பதுபற்றித் தமக்கு எவ்வாறு எடுத்துரைத்திருந்தார் என்பதை வித்தியாதரன் குறிப்பிட்டிருந்தார்.

சுகிர்தராஜன் தமக்குரிய அத்தாட்சிகளை வைத்தியசாலை பிரேத அறையில் ஐந்து மாணவர்களது சடலங்களும் வைக்கப்பட்டிருந்தபோது, அப்பிரேத அறையில் பணிபுரிந்தோர் மூலமாக அறிந்து கொண்டிருந்தார். தனது ஆசிரியரின் நெறிப்படுத்தலில் சுகிர்தராஜன் தனது தொடர்பாளர்கள் மூலமாக பிரதே அறைப் பாதுகாப்பு சற்று தளர்ந்திருந்த நேரம் அங்கு சென்றிருந்தார். அங்கு எடுக்கப்பட்ட படங்களை உதயன் பத்திரிகை மறுநாள் பிரசுரித்திருந்தது. இதன்மூலம் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டவையும் தவறென்பது நிரூபிக்கப்பட்டது. இருதினங்களுக்குப்பின்னர், சுகிர்தராஜன் வேலைக்குச் செல்ல தயாரான சமயம் மோட்டார் சைக்கிளில் வந்த இருவரால் வீட்டுக்கு வெளியே வரும்படி அழைக்கப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்டிருந்தார்.

தேவானந்தாவும், கருணாவும் ஜனாதிபதியின் நெருங்கிய சகாக்களாக இருக்கின்ற காரணத்தினால் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் வன்முறைச் சம்பவங்கள் தொடாபில் பொறுப்புக்கூறல் தொடர்பாக மிகக்குறைவான வாய்ப்பே இருப்பதை ஸ்ரீலங்காவின் ஊடக அமைப்புகள் கருதுகின்றன. அமெரிக்கத் தூதுவரது குறித்த கேபிள் தகவல் வெளியானதும் அதிகளவான ஊடக நிறுவனங்கள் அதனை பிரசுரித்திருந்தன. இந்த ஊடக நிறுவனங்களில், உதயன் நிறுவனம் மீது மட்டுமே நஷ்டஈடு கோரி வழக்குத் தொடர தேவானந்தா முன்வந்திருந்தார்.

2009 ஆம் ஆண்டு கொலையுண்ட சண்டே லீடர் பத்திரிகை ஆசிரியர் லஸந்த விக்கிரமதுங்க கொலை, கேலிச்சித்திரபத்திரிகையாளர் ஜனவரி 2010 ஆம் ஆண்டு காணாமல் போனமை போன்ற விடயங்கள், புறந்தள்ளப்பட்டவையாகவே இருக்கின்றன. இவ்விரு சம்பவங்கள் தொடர்பாக

விசாரணைகளில் முன்னேற்றம் காணப்படுவதாகவும், அரிய தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் அடிக்கடி கூறப்படுகிறது. ஆயினும் இவ்விரு சம்பவங்கள் பற்றிய விசாரணைகள் அடிக்கடி ஒத்திவைக்கப்படுபவையாகவே இருக்கின்றன.

இதேவேளை சர்வதேச ஊடகவியலாளர்கள் சம்மேளனம் (IFJ). சுதந்திர ஊடகவியலாளர்கள் அமைப்பு (FMM) மற்றும் ஸ்ரீலங்கா உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம் (SLWJA) ஆகியவை இவ்விடயத்தை, வெளிப்படுத்தி உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு கோரிக்கைகளை விடுத்தபோது, உத்தியோகபூர்வ பேச்சாளர்கள் இதனை ஒரு துரோகச் செயலாகவே குறிப்பிட்டனர்.

இந்த ஆண்டு ஜனவரி மாதத்தின் இரண்டாம் வாரப்பகுதியில், அரசசார்பான தொலைக்காட்சி சேவை சுதந்திர ஊடக (FMM) மீது கடும் விமர்சனங்களை வெளியிட்டிருந்தது. கடந்த காலங்களில் சுதந்திர ஊடக அமைப்பின் உறுப்பினர்கள் (FMM) பங்குபற்றிய பிரசார நிகழ்வுகளைக் காண்பித்து தொலைக்காட்சி வாயிலாக அவர்கள் மீது கடுமையான கண்டனங்களை அரசாங்கம் முன்வைத்திருந்தது.

இலங்கையில் சர்வதேச ஊடகவியலாளர் சம்மேளனத்துக்குக் கிடைத்த நம்பத்தகுந்த மொழிபெயர்ப்பொன்றில்,சுதந்திர ஊடக அமைப்பின் உறுப்பினர்களை துரோகிகள் என்று தொலைக்காட்சி விவரணத்தில் குறிப்பிட்டிருந்ததை அறியமுடிந்தது.அத்துடன் பொன்னுக்காகவும், பதவிக்காகவும் அவர்கள் தாய்நாட்டுக்கு துரோகமிழைப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. அரசர்களது காலத்தில் துரோகத்தனத்துக்காக கொல்லப்பட்டவர்களின் வாரிசுகளே இன்று உயிரோடு இருக்கிறார்கள் என்ற போலியான விமர்சனத்தையும் அவ்விவரணம் தந்ததோடு, நாட்டுக்கு நல்லதைச் செய்யாதோர் என்றோ ஒரு நாள் தீமையை அனுபவிப்பார்கள் எனவும் அவ்விவரணத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

## தகாத வார்த்தைப் பிரயோகம்

ஜனவரி மாதம் 10 ஆம் திகதி, அரசுக்கு சொந்தமான செய்திப்பத்திரிகையொன்று, ஐரோப்பிய யூனியன் (EU) அமைப்பிடம் இலங்கைக்கான பரஸ்பர வர்த்தக நடைமுறைகளில் தடைகளைக் கொண்டுவருமாறு சுதந்திர ஊடகவியலாளர் அமைப்பு (FMM) கோரியதாக குற்றஞ்சாட்டியிருந்தது. இரு முன்னாள் சுதந்திர ஊடக அமைப்பு ஏற்பாட்டாளர்களும், அதன் தற்போதைய பிரதிநிதி ஒருவரும் இலங்கையில் பல்வேறு கைத்தொழில் நிறுவனங்கள் பயனடையும் குறித்த ஐரோப்பிய யூனியன் சலுகைத்திட்டத்தை பாதிப்படைய வைத்ததாக குற்றஞ்சாட்டப்பட்டனர். அரசசார்பு பத்திரிகையின் செய்தியறிக்கை, மிகவும் கடுமையான விமர்சனங்களை வெளியிட்டதோடு, அக்குறிப்பிட்ட தனிநபர்களை "தேசத்துரோகசக்திகள்" எனவும் குறிப்பிட்டிருந்தது. அத்துடன் வெளிநாட்டுப்பணத்தை அவர்கள் பெறுவதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் இக்குற்றாட்டு தவறானது ஏனெனில் சுதந்திர ஊடக அமைப்பு இலங்கைக்கு எதிராக வர்த்தக சலுகைகளை வாபஸ் பெறும்படி எதனையும் கோரவில்லை.

இத்தகைய குற்றச்சாட்டு சுதந்திர ஊடக அமைப்பை ஜனவரி மாதம் 25 ஆம் திகதி ஒரு 'கறுப்புத்தினத்தை" அனுஷ்டித்து ஊடகவியலாளர்கள் மீதான அடக்குமுறைகள் தொடர்பாக முன்னைய வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளையும் கண்டிக்க வைத்திருந்தது. கொலையுண்ட லசந்த விக்கிரமதுங்க, காணாமல் போன பிரகீத்எக்னலிகொட ஆகியோரும் இதன்போது நினைவுபடுத்தப்பட்டனர். சுதந்திர ஊடகவியலாளரது இந்த ஆர்ப்பாட்டத்தை கொழும்பின் மையப்பகுதியான கோட்டே ரயில் நிலைய சுற்றாடலின் குறுகிய பகுதிக்குள் நடத்தும்விதத்தில் அரசாங்கம் நீதிமன்ற உத்தரவைப் பெற்றிருந்தது.

இதேசமயம் ஆர்பாட்ட இடத்தில் பதாதைகளுடன் வேறொரு கும்பல் வந்திருந்தது. அவர்கள் கைகளில் இருந்த பதாதைகளில் சுதந்திர ஊடகவியலாளர்கள் அமைப்பு கடுமையாக விமர்சிக்கப்பட்டிருந்தது. தமிழீழ விடுதலைப்புலிகளின் சகபாடிகளே சுதந்திர ஊடக அமைப்பினர் என்று

அப்பதாகைகளில் குறிப்பிடப்பட்டிருந்தது. எல்.ரி.ரி.ஈ. அமைப்பு 2009 ஆம் ஆண்டு அரசபாதுகாப்புப் படையினரால் தோற்கடிக்கப்பட்டிருந்தது. அரசதரப்பும்,எல்.ரி.ரி.ஈ.அமைப்பும் பெருமளவு மனித உரிமை மீறல்களில் உள்நாட்டு யுத்தகாலத்தில் ஈடுபட்டிருந்தன.

ஜனவரி 25 ஆம் திகதி அரச கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் ஆங்கிலப்பத்திரிகையான டெய்லி நியூஸ் அதன் ஆசிரியத்தலையங்கத்தில் "நாட்டின் முன்னேற்றத்தை தடுக்கமுற்படும் விஷமசக்திகள் முறியடிக்கப்படும்" எனக்குறிப்பிட்டிருந்தது. சுதந்திர ஊடக அமைப்பு, இலங்கைக்கு மாசுகற்பிப்பதில் முன்னிற்கின்ற அமைப்புக்களில் முதன்மையானது எனவும் அந்த ஆசிரியத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. அத்துடன் சுதநதிர ஊடக அமைப்பு முரண்பாடுகளுக்குள் ஊடுருவியிருப்பதோடு, தன்னிலை பற்றியறிய நிறையவே செய்யவேண்டுமெனவும் அந்த ஆசிரியத்தலையங்கத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஜனவரி 26 ஆம் திகதி அரச கட்டுப்பாட்டுப் பத்திரிகை நிறுவனமான லேக்ஹவுஸ் (அஸோசியேட்டெட்) வெளியிடும் சிங்களப் பத்திரிகையான தினமின செய்தியொன்றை வெளியிட்டிருந்தது. அதில் சிரேஷ்ட அமைச்சரான கெஹெலிய ரம்புக்வெல, வெளிநாடுகளில் புகலிடம்தேடியுள்ள பத்திரிகையாளர்கள், மனித உரிமைகள் நல்லிணக்கம் தொடர்பாக இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக அவதூறு கற்பிக்கும் பிரசாரங்களை மேற்கொண்டுள்ளனர் என்று குறிப்பிட்டிருந்தார்.

இதனையடுத்து லேக்ஹவுஸ் நிறுவனத்தின் ஆங்கிலப் பத்திரிகையான டெய்லி நியூஸ, மனித உரிமை ஆர்வலர்கள், மற்றும் ஊடக சுதந்திரத்துக்காக பிரசாரம் செய்வோர் இலங்கைக்கு துரோகம் செய்வதாகவும் இவர்கள் தோற்கடிக்கப்பட்ட தமிழ் பயங்கரவாத அமைப்புடன் தொடர்ந்து இயங்கிவருவதாகவும் குறிப்பிட்டிருந்தது.

இக்கண்டனம் வலுவடைய ஆரம்பித்திருந்தது. ஐக்கியநாடுகள் ஸ்தாபன மனித உரிமைகள் கவுன்ஸில் (UNHRC) 2012 மார்ச்மாதம் இலங்கை தொடபான கண்டன தீர்மானமொன்றை ஆராய முற்பட்டவேளை,தினமின பத்திரிகை தனது மார்ச் 16 ஆம் திகதிய பதிப்பில், மனித உரிமை ஆர்வலர்களை

“தீமையானவர்கள்” எனக்குறிப்பிட்டதோடு,அவர்களை எல்.ரி.ரி.ஈ.அமைப்பின் ”ஊதுகுழல்கள்” எனத் தெரிவித்ததோடு எச்சரிக்கையொன்றையும் விடுத்திருந்தது. அதில் ஈரான் போன்ற நாடுகளில் இவர்கள் போன்ற கீழ்த்தரமானவர்கள் கல்லினால் எறிந்து கொல்லப்படுவார்கள் எனவும் தெரிவித்திருந்தது .

லேக்ஹவுஸ் நிறுவனத்திலும், ஏனைய அரசசார்பான ஊடகநிறுவனங்களிலும், ஊடக ஊழியர்கள் சம்மேளன சிரேஷ்ட தலைவராக இருந்த தர்மசிறி லங்காபேலி, கண்டனத்துக்குரிய முக்கிய நபராக விளங்கினார். இதுதவிர பி. சரவணமுத்து, நிமல்க்கா பெர்ணான்டோ, சுனிலா அபேசேகரா போன்ற சமூகவியலாளர்கள், அரசியல் விமர்சகர்கள் மீதும் கண்டனங்கள் தொடுக்கப்பட்டன. அத்துடன் தேசிய நல்லிணக்கம் மற்றும் மனித உரிமை மீறல்கள் என்பவை பற்றிக்கருத்து வெளியிட்ட மதப்பிரமுகர்களும், யுத்தத்துப் பின்னரான அவர்களது அபிப்பிராயங்கள் தொடாபாக கண்டனத்துக்குள்ளானார்கள்.

அரசகட்டுப்பாட்டில் இயங்கும் சுயாதீன தொலைக்காட்சிச்சேவையான ஐ.டி. என். ஊடகவியலாளர்கள், மற்றும் மனித உரிமை ஆர்வலர்களை கண்டிக்கும் மற்றுமொரு சாதனமாகப் பயன்படுத்தப்பட்டது. ஜனவரி 9 ஆம் திகதிக்கும் 24 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலத்தில் ஐ.டி.என். தொலைக்காட்சிச்சேவை ஜெனிவாவில் இடம்பெற்ற, ஐக்கிய நாடுகள் மனித உரிமைப்பேரவைக் கூட்டத்தொடரில் பங்குபற்றிய ஊடகவியலாளர்கள் குறித்த தினமும் ஐந்துக்கும் குறையாத கடும் விமர்சனங்களை “விமசும” என்ற நிகழ்ச்சியில் ஒளிபரப்பியிருந்தது. இவ்ஊடகவியலாளர்களை தேசத்துரோகிகள் எனக்குறிப்பிட்டிருந்தது. அந்திய சக்திகளின் செல்வாக்கிற்குட்பட்ட: தேசத்துரோகிகளுக்கு துணைபோகும் பேர்வழிகள் எனச்சித்தரிக்கும் வகையில் ஊடகவியலாளர்கள் பற்றிய பல்வேறு கோணங்களிலும் வரைபடங்களும். ஏனைய புகைப்படங்களும் இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத்தின் தலைவர் ஞானசிறி கொத்திகொடவின் படங்களை ஐ.ரி.என். வெளியிட்டிருந்தது. அந்நிகழ்ச்சித் தயாரிப்பாளர், அச்சுறுத்தல் காரணமாக வெளிநாடுகளில் தஞ்சமடைய நேரிட்ட ஊடகவியலாளர்களை “துரோகிகள்” எனக்குறிப்பிட்டதோடு, தாம் வெளியிடும் செய்திகளின் மூலம் புலம்பெயர்ந்த

இலங்கைத்தமிழர்களின் பிரிவினைவாதப்போக்கிற்கு துணைபோவதாகவும் தெரிவித்திருந்தார்.

இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம் ( தற்சமயம் இலங்கை பத்திரிகையாளர் சங்கம் எனப்பெயர் மாற்றம் பெற்றுள்ளது.) சர்வதேச பத்திரிகையாளர் சம்மேளனத்துடன் நீண்டகாலமாக இணைந்துள்ளது. கொத்திகொடவுக்கு முன்னர் இலங்கைப் பத்திரிகையாளர் சங்கத்தின் தலைவராகத் தெரிவான போதல ஜயந்த ஜனவரி 2010 ஆம் ஆண்டு முதல் வேறொரு நாட்டில் புகலிடம் கோருவதற்கு ஆறுமாதங்கள் முன்பதாக மூர்க்கத்தனமான முறையில் அவர் தாக்கப்பட்டிருந்தாா. மாாச் 23 ஆம் திகதி கொத்திகொட தமக்கு விடுக்கப்பட்ட ஐ.ரி.என். தொலைக்காட்சி மூலமான அச்சுறுத்தல்பற்றி, இலங்கையின் ஊடகத்துறை அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தனவின் கவனத்துக்குக் கொண்டுவந்திருந்தார். இதன்பின்னர் அமைச்சர் ஐ.ரி.என் செய்தி இயக்குநர் சுதர்மன் ரத்தெலிகொடவை அழைத்து ஐ.ரி.என் சேவையின் கொத்திகொட மீதான கண்டனம் பிரசாரம் முடிவுக்கு வருவதை உறுதிப்படுத்தியிருந்தார். ஆயினும் அக்கண்டனங்கள் தொடர்ந்த வண்ணமிருந்தன என்று சர்வதேச பத்திரிகையாளர் சம்மேளனத்தின் இலங்கை இணைப்பாளர்கள் மூலம் அறியமுடிந்தது.

அரசகட்டுப்பாட்டிலுள்ள இலத்திரனியல் ஊடகங்கள் மூலமாக தமது பொது விமர்சனங்களில் இரு ஊடகவியலாளர்கள் ஈடுபட்டனர். இவர்களில் ஒருவர் இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபன தலைவர் ஹட்சன் சமரசிங்க,இவர் தினமும் வானொலி மூலமான கலந்துரையாடல் நிகழ்ச்சியொன்றை நடத்துபவர். அதில் தேசத்தின் விரோதிகள் என்று சிலரைக்குறிப்பிட்டு கடுமையான விமர்சனங்களை அவர்கள் மீது முன்வைத்தார். மற்றயவர் முன்னாள் தினமின ஆசிரியர் இவரும் ஐ.ரி.என். தொலைக்காட்சிச் சேவையின் கலந்துரையாடல் நிகழ்ச்சியில் பங்குபற்றி, கண்டனங்களை வெளியிட்டிருந்தார்.

### செய்தி இணையத்தளங்கள் மீதான நடவடிக்கைகள்

அரசியலமைப்பின் கீழ் அஞ்சல் அலைவரிசைகளின் இத்தகைய ஒழுங்கற்ற நிர்வாகப் போக்குக்குறித்து, கேள்வி எழுப்புவதற்கான உரிமையை எதிர்க்கட்சி

கொண்டிருக்கின்ற போதிலும், அவ்வாறு செய்வதிலிருந்தும், அக்கட்சி விலகியிருக்க விரும்பியமை ஒரு குறிப்பிடப்பட வேண்டிய அம்சமாகக் காணப்படுகின்றது . செப்டெம்பர் மாத இறுதிப்பகுதியில், ஊடக அமைச்சின் பாராளுமன்றக்கமிட்டிக் கூட்டமொன்று கூடியது இக்கூட்டத்தில் பங்குபற்றிய உறுப்பினர்களுக்கு எந்தவொரு விடயத்தைப்பற்றியும் உரையாடக்கூடிய நிகழ்ச்சிநிரல் வழங்கப்பட்டிருக்கவில்லை.

ஊடகத்துறையில் மிகக்குறுகிய கால அவகாசமே தமக்கு வழங்கப்படுவதில், ஊடகசுதந்திரம் பற்றிப்பேசுவதற்கு தமக்கு எவ்வித கடமைப்பாடும் இல்லை என எதிர்க்கட்சி தெரிவிக்கின்றது. எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க, அண்மையில் பாராளுமன்றத்தில் அரசகட்டுப்பாட்டில் உள்ள ஊடகத்துறையை மக்கள் பகிஷ்கரிக்கவேண்டுமெனக் கோரியதால் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வெளிவரும் ஒரேயொரு ஊடக நிறுவனத்தைத் தவிர ஏனைய சகல ஊடக நிறுவனங்களையும் மக்கள் பகிஷ்கரிக்க வேண்டுமெனவும், இவை அரசின் நடவடிக்கைகளை விமர்சிப்பதில்லை எனவும் அவர் தெரிவித்திருந்தார். அரச நிர்வாகத்தில் தூய்மை ஏற்படுத்தவே எதிர்க்கட்சி முயல்வதாக அவர் குறிப்பிட்டதோடு, குறுகிய விளம்பர ஆதாயங்களுக்காக இது விடயத்தில் சிறிதளவு கரிசனையையே ஊடகத்துறை வெளிப்படுத்துவதாக அவர் தெரிவித்திருந்தார். ஊடகத்துறை தற்போதைய அரசாங்கத்தின் ஒரு கருவியாக அதன் எதிர்பார்ப்புகளையே நிறைவேற்ற முயல்வதாக இருக்கின்றதென்பதே அவரது அபிப்பிராயமாகும்.

பதிலடி நடவடிக்கைகளுக்காக, இணையத்தளங்களைப் பயன்படுத்தும் ஒரு தந்திரோபாயத்தை எதிர்க்கட்சி கையாண்டிருந்தது. கடந்த சில மாதங்களில் சில நெறிமுறை மாற்றங்களுக்கும், குறுக்கீடுகளுக்கும் உட்பட்டிருந்தன. 2011 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நாட்டில் செய்திகளை வெளியிடும் சகல இணையத்தளங்களையும் பதிவு செய்யும்படி கோரி, ஊடக அமைச்சு ஒரு விதிமுறையை அறிமுகப்படுத்தியிருந்தது . இந்த நடைமுறைக்கெதிராக சுதந்திர ஊடகவியலாளர்கள் அமைப்பு உயர்நீதிமன்றில் தாக்கல் செய்திருந்த அடிப்படை உரிமைகளின் கீழான மனுவொன்றும் உயர்நீதிமன்றத்தினால் மேமாதம் நிராகரிக்கப்பட்டிருந்தது. பதிவு

செய்வதற்கான தேவைப்பாடுகளை ஏற்றுக்கொண்டுள்ளதன் காரணமாக இவ்வழக்கை மனுதாரர்கள் நிறுத்தமுடியாதென உயர்நீதிமன்றம் தெரிவித்திருந்தது.

ஜூன் 29ஆம் திகதி, ஸ்ரீலங்கா X -நியுஸ், ஸ்ரீலங்கா மிரர் என்ற இரு இணையத்தளங்களை கொழும்பு நகர பொலிஸார் சோதனையிட்டனர். அங்கு கடமையிலிருந்த ஊழியர்களை கைது செய்ததோடு, அங்கிருந்த அவர்களது சகல உபகரணங்களும் கைப்பற்றப்பட்டன. அன்றைய தினம் காலை 25 பொலிஸ் அதிகாரிகள்,அவ்விரு இணையத்தளங்களும் செயலாற்றிய இடத்துக்கு வந்திருந்தனர். பூட்டுப்போடப்பட்ட அவ்விடத்தில் மூன்று மணிநேரம் வரை சகல ஊடக ஊழியர்களும் பொலிஸாரால் விசாரிக்கப்பட்டனர். இதனையடுத்து குற்றப்புலனாய்வுப்பிரிவு (CID) தலைமையகத்துக்கு அவர்கள் அனைவரும் கொண்டு செல்லப்பட்டனர். இலத்திரனியல் கருவிகளும, ஏனைய உபகரணங்களும் அந்த இணையத்தளங்கள் இயங்கிய இடங்களிலிருந்து கைப்பற்றப்பட்டன.

அதேசமயம் முன்பு ஸ்ரீலங்கா மிரர் அதன் பின்னர் ஸ்ரீலங்கா ஓ நியுஸ் ஆகியவற்றின் பிரதம ஆசிரியராக இருந்த ருவன் பெர்டினான்டஸ் என்பவரது இல்லத்தையும் பொலிஸார் சோதனையிட்டனர். பெர்டினான்டஸ் எதிர்க்கட்சி அரசியல்வாதியான மங்கள சமரவீரவின் நெருங்கிய அரசியல் சகா ஆவார் அனைத்து இணையத்தளங்களும் இலங்கையின் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கியதேசியக்கட்சியுடன் இணைந்ததாகக் காணப்பட்டது. சோதனையிடுவதற்கு ஒரு நாள் முன்பதாக இலங்கை அரசாங்கம் நாட்டின் ஐந்து முக்கிய தமிழ்மொழி மூலமான செய்தி இணையத்தளங்களின் இன்டர்நெட் சேவைகளை துண்டிக்குமாறு உத்தரவிட்டிருந்தது. தமிழ்வின், அதிர்வு, சரிதம், பொங்குதமிழ், பதிவு ஆகியவையே அவ் இணையத்தளங்களாகும். 2011 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் அரசாங்கத்தினால் தடுக்கப்பட்ட ஐந்து இணையத்தளங்களில் ஸ்ரீலங்கா மிரர் இணையத்தளமும் ஒன்றாகும். நாட்டின் அன்றாடவிடயங்களை வெளியிடும் இணையத்தளங்கள் அனைத்தும் பதிவு செய்யப்படவேண்டும் என்ற பணிப்புரையும் அரசால் வழங்கப்பட்டிருந்தது. அதேசமயம் பதிவு செயய்ப்படாத இணையத்தளங்களுக்கு இணைப்பு ஏற்படுத்தப்படமாட்டாது

என்ற நிபந்தனையுடன் தடையை நிறுத்தவும் முடிவு செய்யப்பட்டது.

ஜுன் 29ஆம் திகதி அரசாங்கம் மூன்று மாகாணசபைகளை கலைத்து விட்டதருணத்திலேயே இணையத்தளங்கள் மீதான சோதனை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. அரசாங்கத்தினால் கலைக்கப்பட்ட மூன்று மாகாணசபைகளில் கிழக்கு மாகாணசபையும் உள்ளடங்குகின்றது. தேர்தல் காலத்தில் அரசுக்கு எதிரான பிரசாரங்கள், விமர்சனங்களை குறித்த மூன்று மாகாணசபை தேர்தல்காலங்களிலும் மேற்கொள்ளப்படுவதை தடுக்கும் விதத்திலேயே இணையத்தளங்கள் மீதான சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. இச்சோதனை இடம்பெற்ற ஒரு வார காலத்தில் ஊடக அமைச்சு இணையத்தளங்களை பதிவு செய்வதற்கான நடைமுறைகளை மீள்வலியுறுத்தியதோடு, வருடாந்த கட்டணத்திற்கான மேலதிக தேவைப்பாடொன்றையும் சேர்த்திருந்தது.

இப்பதிய நெறிப்படுத்தல்கள், நீதித்துறையின் ஆய்வுக்குட்படாதபோதிலும், செப்டெம்பரில் இலங்கையின் உயர் நீதிமன்றம், பொலிஸாரினால் சோதனையிடப்பட்ட இணையத்தளங்களின் உரிமையாளர்களால் தொடுக்கப்பட்ட அடிப்படை உரிமைகள் மனு தொடர்பாக முன்னர் வழங்கப்பட்ட இணையத்தள பதிவு பற்றிய தீர்ப்பினை உதாசீனப்படுத்தலாகாது எனவும் தெரிவித்திருந்தது. அத்துடன் இணையத்தள காரியாலயங்களில் கைப்பற்றப்பட்ட உபகரணங்களை இருவாரங்களில் மீளக்கையளிக்குமாறும் உத்தரவிட்டிருந்தது. இதேசமயம் மஜிஸ்திரேட் நீதிபதியின் உத்தரவுக்கமைய கைதாகி காவலில் வைக்கப்பட்ட இணையத்தள ஊழியர்களும் ஒரு நாள் காவலில் வைக்கப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டனர். வழக்குத் தொடுநர்கள், இவ்வழக்கை முன்னெடுக்க விரும்பவில்லை. ஏனெனில் இவ்வழக்கு சங்கடத்தை ஏற்படுத்தக்கூடியது என்பதை வழக்குத் தொடுநர்கள் அறிந்திருந்ததை அண்மையில் இவ்வழக்கு தொடர்பாக வழங்கப்பட்ட சாட்சியம் மூலமாக சமரவீர அறிந்திருந்தார். இணையத்தள காரியாலயங்களை சோதனையிடுவதற்கு வழங்கப்பட்ட அனுமதியையும் உயர்நீதிமன்றம் அநாவசியமானதென்றே கருதியதை உயரமுடிந்தது. “ஜனாதிபதியின் மேன்மைக்கு” ஊறுவிளைவிப்பதாகக் குறிப்பிட்டே அக்காரியாலயங்கள் சோதனையிடப்பட்டன.

இணையத்தள காரியாலயங்கள் பொலிஸாரினால் சோதனையிடப்பட்ட தினத்தில், ஸ்ரீலங்கா -X- இணையத்தளத்தில் பணியாற்றும் ஊடகவியலாளரான சாந்த விஜேயசூரிய என்பவர் சந்தையில் பொருட்களை வாங்க நின்றவேளை கடும்போக்கான சிலர் அவரை அணுகினர். அப்பேர்வழிகள் அவரைமடக்கிப்பிடித்து, அங்கு நின்ற வேண்வண்டியொன்றுக்குள் பலவந்தமாக ஏற்றிச்செல்ல முயன்றதையே ஊகிக்கமுடிந்தது. ஆயினும் விஜேயசூரிய அவர்களிடமிருந்தும் தப்புவதற்காக அவ்விடத்திலிருந்தும் ஓடியிருந்தார். அடுத்த இருவாரங்களும் கொழும்பு நகரிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் அவர் தலைமறைவாக இருந்ததுடன் அயலிலுள்ள தெறிகாசிய நாடொன்றில் அவர் பின்னர் புகலிடம் தேடியிருந்தார்.

அவரைக்கடத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிக்கான காரணம் தெளிவாக இல்லை. இச்சம்பவத்துக்குப்பின்னர் கொழும்புச்செய்திகளில் வெளியான தகவல்களில் விஜேயசூரிய, எதிர்க்கட்சி இணையத்தளங்களை இயங்கச்செய்வதற்கான உள்ளார்ந்த தகவல்களைக் கொண்டிருந்தவர் என்ற விடயம் தெளிவாகியிருந்தது .

**பத்திரிகை கவுன்ஸிலின் மீளமைப்பு**

இலங்கையின் ஊடக சமூகம் நீண்டநாட்களாக செயலற்றிருந்த பத்திரிகை கவுன்ஸிலின் 1973 ஆம் ஆண்டு சட்டமூலத்தின் மீளமைப்புப் பற்றியும் கரிசனை கொண்டிருந்தது. இச்சட்டமூலம் பல கடுமையான அம்சங்களை கொண்டதாக இருந்தது. அதில் உள்ள சட்டங்களை மீறுவோர் மீது குற்றவியல் சட்டத்தின் கீழ் வழக்குத் தொடர்வதற்கு இச்சட்டமூலம் வழிசெய்கின்றது. இச்சட்டம் இருவருடங்களுக்கு முன்னர் மீளாய்வு செய்யப்பட்டபோதிலும, இதனை செயல்படுத்துவதற்கான முயற்சிகள் பலனளிக்கவில்லை. ஜனாதிபதி இது குறித்து ஊடகவியலாளர்கள் சிலரது உதவியை நாடியபோதிலும் அவரால் உரிய ஒத்துழைப்பைப் பெறமுடியவில்லை. ஆயினும் ஆரியநந்த தொம்பகஹவத்த என்ற பத்திரிகையாளர் இவர் அரச சேவையிலும் இருப்பவர் மீளமைக்கப்பட்ட பத்திரிகைக் கவுன்ஸிலுடன் இவர் கைச்சாத்திட்டிருந்தார். இலங்கைப் பாராளுமன்றின் பொது அமைப்புகள் மீதான கமிட்டி, அண்மையில் இலங்கைப்

பத்திரிகைக் கவுன்ஸிலை பராமரிப்பதில் ஏற்படக்கூடிய செலவீனங்கள் பற்றி ஆராய்ந்து, அதனை மூடிவிடும்படி ஆலோசனை தெரிவித்திருந்தது. ஆயினும் பத்திரிகைக்கவுன்ஸில் நிர்வாகம், அதனை மூடிவிடும் யோசனையை ஏற்கமுன்வரவில்லை. ஏனெனில் ஊடகத்தறை மீது எடுக்கப்படக்கூடிய நடவடிக்கைகள் குறித்து செல்வாக்குச் செலுத்த வேண்டுமென்ற நிலைப்பாட்டை அது கொண்டுள்ளது.

பத்திரிகைத்துறையின் சுய ஒழுங்கமைப்பு குழு, இலங்கைப்பத்திரிகை முறைப்பாட்டுக் கவுன்ஸில் ஆகியவை அவற்றின் செயற்பாடுகளுக்கான உதவியை அவற்றினது பங்குதாரர்கள் மூலம் உறுதிப்படுத்திக்கொண்டன. ஆயினும் அடுத்த இருவருடங்களில் கொடுப்பனவு உதவிகள் வாபஸ் பெறப்படுவது, அவற்றின் செயற்பாடுகளை பாதிப்படைய வைப்பதாகவே இருக்கின்றது. பத்திரிகைக் கவுன்ஸில் தொடர்பாக மூலவளக் குறைபாடுகள் இருந்தபோதிலும். மூன்று முறைப்பாட்டு அலுவலர்கள், 16 முழுநேர பத்திரிகை கவுன்ஸில் ஊழியர்களுக்கெதிராக பணியாற்றுகின்றனர். இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு கவுன்ஸில் மிகவும் நம்பிக்கைக்குரிய அமைப்பாக இருக்கின்றது. ஏனெனில் பத்திரிகைத்துறையில் நம்பகத்தன்மையைப் பெற்றதாக அது காணப்படுகின்றது.

யுத்தத்துக்குப் பின்னரான சூழலில் பிராந்தியப்பத்திரிகையாளரின் பங்களிப்பு முக்கியமானது. ஆயினும் தகுந்த ஊதியமின்மை, மற்றும் சுமூகமாக மேற்கொள்ளக்கூடிய சூழல் காணப்படாமை போன்றவை, அவர்களது தொழில் முயற்சிகளையும், ஊக்கத்தையும் பாதிக்க வைப்பதாக அமைந்திருந்தன. தாம் ஓரங்கட்டப்பட்டது போன்ற உணர்வையே அவர்கள் கொண்டிருக்கின்றனர். ஏனெனில் தமக்குத் தகவல்கள் தரப்படுவதில் பாரபட்சம் காட்டப்படுவது போலவும், அரச நிறுவனங்கள் கொழும்பிலுள்ள ஊடகத்துறையினருடன் மட்டும் தொடர்புகளை வைத்திருப்பதாகவும் அவர்கள் உணர்கின்றனர் . தகவல் அறியும் உரிமைச்சட்டமூலம் இவர்களைப் போன்ற ஊடகவியலாளர்களைப் பொறுத்தவரை முக்கியமானதாக இருக்கின்றது. அத்துடன் கற்றுக்கொண்ட பாடங்கள் நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழு சிபார்சுகள் தகுந்த முறையில் அமுலாக்கப்படவேண்டுமென்பதில் இவர்களுக்கு விசேட அக்கறையும் காணப்படுகின்றது.

இலங்கையின் ஊடகத்துறையின் நிலவரம் பலவீனமானதால், விளம்பரதாரர்களின் அழுத்தங்களுக்கும் முகங்கொடுக்கவேண்டியதாகவுள்ளது. அரசாங்கத்தின் உதவியோ அல்லது அதன் முகவர்களது உதவிகளோ எந்தவிதத்திலும் விளம்பரங்களைப் பொறுத்தவரை உதவியளிக்கும் தன்மையுடையதாக இல்லை. இலங்கைப் பத்திரிகைக் கவுன்ஸிலின் கணிப்பொன்றில், அரசாங்கம் சார்பாக மொத்தம் 16 சதவீதம் விளம்பரங்களுக்காக செலவிடப்படுவது அறியப்பட்டுள்ளது. ஊடகத்துறையில் அரசாங்கம் குறிப்பிடத்தக்க உரிமத்தைக் கொண்டிருக்கும் பட்சத்தில் அதன் செலவீனம் 38 சதவீதமாகவும் காணப்படுகின்றது. இத்தகைய செல்வாக்கினால் பொதுநிறுவனங்களான வங்கிகளையும் தற்போதைய நிர்வாகம் பொறுப்பேற்பதாக இருக்கின்றது. பெருமளவிலான ஊடகநிறுவனங்கள் அரச விளம்பர அழுத்தங்களுக்குள்ளாகியிருப்பதோடு, ஆசிரியபீட உயர்பீடத்தில் மாறறங்களை ஏற்படுத்தும் நிர்ப்பந்தத்துக்குமுள்ளாகியுள்ளன.

**ஆசிரியர்களை நீக்குவதும், களையெடுப்பும் .**

ஜுன் மாதம் சிலோன் ருடே பத்திரிகையின் ஆசிரியர் திடீரென நீக்கப்பட்டார். அப்பத்திரிகை நிர்வாகத்தின் இம்முடிவை எதிர்த்து ஆசிரியர் பீடத்தைச்சேர்ந்த வேறு நான்கு உறுப்பினர்களும் இராஜினாமாச் செய்திருந்தனர். இத்தருணத்தில் ஆசிரியபீடத்தின் முழுபொறுப்பும் ஏற்கனவே ஆசிரியா பதவிக்கு அமர்த்தப்பட்ட ஹனா இப்ராஹிமிடம் வழங்கப்பட்டது. ஹனா இப்ராஹிம் தொழில் ரீதியாக சர்வதேச ஊடக சுதந்திர அமைப்புகளுடன் தொடர்புகளைக் கொண்டிருப்பவர் சுதந்திர ஊடக அமைப்பின் ஏற்பாட்டாளராகவும் அவர் இரு வருடங்கள் பணியாற்றியிமிருந்தார். இந்நிலையில் சிலோன் ருடே ஆசிரியரின் பதவிநீக்கம் கடுமையான விமர்சனங்களுக்குள்ளாகியிருந்தது.

சிலோன்ருடே ஆசிரியபீடம் அதன் தொழில்சார்ந்த நடவடிக்கையில் ஒரு தளர்வை சந்தித்தது. ஆயினும் அப்பதவி மாற்றத்துக்கு எவ்வித காரணமும் இல்லை எனவும், பத்திரிகை உள்ளடக்கங்களை மேம்படுத்தவதே இம்மாற்றத்துக்கான முக்கியகாரணமென்று தெரிவிக்கப்பட்டது. இலங்கையின் சுதந்திர ஊடக அமைப்புகள் இதனை முதலில் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆயினும் ஒரு வாரகாலப்பகுதியில் அவை தமது நிலைப்பாட்டைத்

தளர்த்திக்கொண்டன.

சிலோன்ருடே பத்திரிகை பலதரப்பட்ட தொழில் முயற்சிகளிலும் ஈடுபடும் தொழில் அதிபர் டிரான் அலஸினால் நடத்தப்படுகின்றது. இவருக்கு நீண்டகால அரசியல் ஈடுபாடும் காணப்படுகின்றது. மங்கள் சமரவீரவின் எதிர்க்கட்சி அரசியலுடனும் இணைந்திருந்ததோடு, முன்னாள் இராணுவத்தளபதி ஜெனரல் சரத்பொன்சேகா, 2010 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளராவதற்கும் டிரான் அலஸ் ஒத்துழைப்பு வழங்கியிருந்தார். இவர் தமது அரசியல் பாதைகளை மாற்றியுமிருந்தார். மங்கள் சமரவீர ராஜபக்ஷவின் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியுடன் முரண்பட்டதோடு, பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சியுடன் தம்மை இணைத்துக்கொண்டுமிருந்தார்.

அலஸ் இந்த இணைப்பிலிருந்தும் விலகிக்கொண்டார். ஆயினும் சரத்பொன்சேகா மீது நம்பிக்கை வைத்து எதிர்க்கட்சிகளோடு ஓர் அங்கமாக அவர் செயல்பட்டார். ஆயினும் ராஜபக்ஷ அரசின் ஒரு மௌனமான பங்காளி என்றே ஐக்கியதேசியக்கட்சி டிரான் அலஸைக் குறிப்பிடுகின்றது.

ஊடகத்துறையின் உரிமையையும், அரசியல் ஈடுபாட்டையும் கொண்டிருப்பதனால் ஏற்படுகின்ற அழுத்தங்கள், பத்திரிகைச் சமூகத்தினுள்ளும் பிரதிபலிப்பதால், பத்திரிகையாளர்கள் தமது தரங்களிலிருந்து ஜூலை 8 ஆம் திகதி சிலோன்ருடே ஆசிரியத்தலையங்கம் “ஊடகசுதந்திரம் துஷ்பிரயோகம் செய்யப்படும்போது” என்றமைந்திருந்தது. ஆசிரியபீட கட்டுப்பாட்டை இப்ரஹிம் கொண்டிருந்த நிலையில் அவரது கண்ணோட்டத்தை அந்த ஆசிரியத்தலையங்கம் வெளிப்படுத்தியது. ஜூன் 29 ஆம் திகதி எதிர்க்கட்சியுடன் சம்பந்தப்பட்ட இரு இணையத்தள காரியாலயங்கள் சோதனையிடப்பட்டமைபற்றி அந்த ஆசிரியத்தலையங்கம் குறிப்பிட்டிருந்தது.

ஆசிரியத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டவை :

“அரசாங்கத்தின் கெடுபிடிகளுக்குள்ளாகியிருக்கின்ற போதிலும் ஊடக சுதந்திரத்தை இணையத்தள சமூகத்தினர் தவறான முறையில் ஏனையோரை கவலை கொள்ளச்செய்யவும், மானபங்கப்படுத்தவும், பயன்படுத்துவது

ஏற்றுக்கொள்ளப்படமுடியாதது. பத்திரிகை, இலத்திரனியல், இணையத்தளம் என்பவை ஊடக தர்மத்தைப் பேணி பொறுப்புடன் செயற்படவேண்டியவையாக இருக்கின்றன. மேற்குறிப்பிட்ட ஊடகத்துறையின் மேன்மையும் பாதுகாக்கப்படவேண்டிய அதேசமயம், நாம் ஊடக கோட்பாடுகளை மதித்து பொறுப்புணர்வுடன் பிரசுரமாகும் செய்திகளும், கருத்துக்களும் அல்லது ஒளி - ஒலி பரப்பாகும் விடயங்கள, பாரபட்சமற்றவையாகவும், திரிபுபடுத்தப்படாதவையாகவும், மாசுகற்பிக்காதவையாகவும் இருக்கவேண்டும். துரதிஷ்டவசமாக இத்தகைய தன்மை இணையத்தளங்ளில் காணப்படுவதாக இல்லை.

மாறுபாடான கருத்துக்களுக்கான சூழ்நிலை அருகிவருகின்ற நிலையில, பிரதான ஊடகத்துறை தொடர்ச்சியான அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ள நிலையில், இணையத்தள ஊடகம் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. பிரதான ஊடகத்துறை அடைவதற்கு அஞ்சிய பகுதிகளை இணையத்தளங்கள் சென்றடைந்துள்ளன. இந்நிலையில் இணையத்தள ஊடகங்கள் ஊடக சுதந்திரத்தை துஷ்பிரயோகம் செய்வதோடு, மக்களுடைய நம்பிக்கைகளையும் சிதைக்கின்றன. அத்துடன் பெரும் அபாயத்துக்கும் வழியமைக்கின்றன. இதன் மூலம் அரசாங்கத்தின் ஊடகத்துறை மீதான பழிவாங்கும் போக்கிற்கும் அவை இடமளிக்கின்றன. எந்தவொரு அரசாங்கமும் முழுமையான இணையத்தள சுதந்திரம் குறித்து மகிழ்ச்சி கொண்டதில்லை. அத்துடன் கருத்துச் சுதந்திரத்துக்கும், தகவலறிவதற்கான அணுகுமுறைக்குமிடையே ஒரு சமநிலையை பேணுவதிலும் பலத்த சவால் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் பொறுப்பற்ற முறையில் இணையத்தளங்கள் நடந்து கொண்டுள்ளமை, அரசாங்கத்துக்கு சட்டரீதியாக அவற்றின் மீது செல்வாக்குச் செலுத்தும் நிலையை உருவாக்கிவிட்டுள்ளது. அத்துடன் ஊடகத்துறையை கட்டுப்படுத்தும் நிலையையும் அது ஏற்படுத்திவிட்டுள்ளது. இதன்காரணமாகவே இணையத்தளங்கள் அல்லது ஏனைய ஊடகத்துறை சார்ந்த ஊடகவியலாளர்கள் மிகவும் பொறுப்புணர்வுடன் ஊடகவியல் சார்ந்த பணிகளை மேற்கொள்ளவேண்டியோராகின்றனர்.

இப்ரஹிம் கொண்டிருந்த ஊடகத்துறையின் சுதந்திரத்துக்கான நிலைப்பாடுகள் ஒருபுறமிருக்க,அவரது ஆசிரியத்தலையங்கம்,எதிர்க்கட்சி செய்தி

வட்டாரங்களை ஆத்திரமடையவைத்திருந்தது.சி.பி.ஜே வின் (CPJ) ஆசிய நிகழ்ச்சி இணைப்பாளருக்கு எழுதிய கடிதமொன்றில் பாதகமான, வருத்தமடையவைக்கும் கச்சிதமற்ற, கருத்துக்களை ஹனா இப்ரஹிம் குறிப்பிட்டுள்ளதாக சமரவீர தெரிவித்திருந்தார். இப்ரஹிமின் ஆசிரியபீட வழிகாட்டலில் சிலோன்ருடே பத்திரிகையும் அதன் சிங்களப் பதிப்பான மௌபிமவும், இலங்கை அரசின் இணையத்தளங்கள் மீதான சட்டவிரோத நடவடிக்கைகளுக்குத் துணைபோவதாகவும் சமரவீர தெரிவித்திருந்தார். சில சமயங்களில் செய்திசேகரிக்கும் கடமைக்கும் அப்பால் சென்று மேலும் நடவடிக்கைகளைத் தூண்டிவிட்டு இணையத்தள செய்தியாளர்களையும் அவற்றின் நிர்வாகிகளையும் கைது செய்வதை ஊக்குவிப்பதாக இருப்பதாகவும் சமரவீர தெரிவித்திருந்தார். இந்த இரு பத்திரிகைகளும் வெளிநாட்டு அரசாங்கங்கள், மற்றும் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தினால் இணையத்தளங்கள் சோதனையிடப்பட்டது சம்பந்தமாக எந்தவொரு அறிக்கையையும் வெளியடவில்லை எனவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இலங்கையில் சுதந்திரமாக இயங்கும் பத்திரிகையாளர்கள்,எதிர்த்தரப்பு இணையத்தளங்களில் வெளியாகும் தகவல்கள் தொழில்சார் தகமைகளை பெருமளவில் கொண்டிருப்பதில்லை என்பதனை ஏற்றுக்கொண்டுள்ளார்கள். ஆயினும் சமரவீர, இந்த இணையத்தளங்கள் கொண்டுள்ள தகமை அரசசார்பான ஊடகங்களைவிட உயர்வானவை எனக்குறிப்பிட்டுள்ளார். இதனை சிலர் ஏற்கமாட்டார்கள். ஏனெனில் கோட்பாட்டு ரீதியாக சர்வதேச பத்திரிகையாளர்கள் சம்மேளனம் (IFJ) இலங்கையில் அரசசார்பு ஊடகத்துறை பொது ஊடகத்துறையாக மாற்றமடைய வேண்டுமென்பதையே எப்போதும் வலியுறுத்தி வருகின்றது.

சுதந்திர ஊடக அமைப்பின் செயல்பாட்டாளரான சுனில் ஜயசேகர இசுரச என்ற சிங்களப் பத்திரிகையின் பிரதி ஆசிரியராகப் பணியாற்றியவர். த சண்டே லீடர் பத்திரிகையின் சிங்களப் பதிப்பாக இது வெளிவருகின்றது. இப்பத்திரிகை ஸ்தாபனம் எதிர்கொள்ளும் நிதிநெருக்கடி காரணமாக பலமாதங்கள் சம்பளக் கொடுப்பனவு மறுக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டிருந்தார். ஆயினும் அவர் கடமையுணர்வோடு அங்கு பணியாற்றினார். இருந்தபோதிலும் அவரது நிறுவனத்தலைவரினால் அவரது சேவை

இனித்தேவைப்படமாட்டாது என ஜுலை மாதத்தில் தெரிவிக்கப்பட்டது. அத்துடன் சுதந்திர ஊடக அமைப்பிற்கெதிராக த சண்டே லீடர் பத்திரிகை அக்காலப்பகுதியில் வெளியிட்ட கட்டுரைகளின் வெளிப்பாடாக அவர் பதவி நீக்கப்பட்டாரோ என்பது தெளிவற்றதாகவே இருக்கின்றது.

பங்குச்சந்தை முதலீட்டாளரினால் த சண்டேலீடர் பத்திரிகை வாங்கப்பட்ட பின்னர் அப்பத்திரிகையின் ஆசிரியராக இருந்த பிரெட்ரிக்கா ஜோன்ஸ், அவரது பதவியிலிருந்தும் செப்டெம்பர் மாத இறுதிப்பகுதியில் பலவந்தமாக இராஜினாமாச் செய்ய வைக்கப்பட்டார். அஸங்க செனிவிரத்ன தற்சமயம் இப்பத்திரிகையின் பெருமளவு பங்கை கொண்டிருக்கின்றார். மிகமோசமான நிதிநெருக்கடியிலிருந்து சண்டேலீடர் பத்திரிகையைப் பாதுகாக்கவே அதனைத் தாம் பொறுப்பேற்றதாக அவர் தெரிவித்துள்ளார். இது விடயத்தில் அவரை ஒரு முதலீட்டாளராக கொண்டு வந்தது ஜான்ஸ் என்பது குறிப்பிடத்தக்கது. இதன்மூலம் குறிப்பிடத்தக்களவு கமிஷனும் அவருக்கு வழங்கப்பட்டிருந்தது. ஆயினும் ஆசிரியர் பீடத்தில் மாற்றத்தைக் கொண்டுவர செனிவிரத்ன பின்னர் தீர்மானித்தபோது, ஜான்ஸ் இணங்கியதற்கு அமைவாக ஆசிரிய பீடத்திலிருந்தும் அவர் விலகிக் கொள்வதற்கான தொகையை செனிவிரத்ன வழங்கியிருந்தார்.

இருந்தபோதிலும் ஜான்ஸ் நிர்ப்பந்தப்பட்டே வெளியேற்றப்பட்டாரென்பதே ஏற்புடைய தகவலாக இருந்தது.அவரது பின்னணி பெரிது முரண்பாடான போக்கைக் கொண்டிருந்தமையும், ஜனாதிபதியின் சகோதரரான பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுடன் பலதடவைகள் முரண்பட்டிருந்தமையே அவரது வெளியேற்றத்துக்கான காரணமாக அமைந்தது. லஸந்த விக்கிரமதுங்க ஆசிரியராக கடமையாற்றிய காலத்திலிருந்து த சண்டேலீடர் பத்திரிகையில் வெளியான தகவல்கள் அவரது வெளியேற்றத்துக்கான பின்னணியைக் கொண்டிருந்தன. அச்சமயம் கோத்தபாய ராஜபக்ஷவின் மேற்பார்வையில் பாதுகாப்பத்துறை தளவாடங்கள் முறைகேடாக கொள்வனவு செய்யப்பட்டமை குறித்து த சண்டே லீடர் பத்திரிகை தகவல்களைத் தந்திருந்தது. 2010 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்க முன்பதாக த சண்டேலீடர் பத்திரிகை முன்பக்கச் செய்தியொன்றை பிரசுரித்திருந்தது. அச்செய்தியில் சர்வதேச ரீதியாக சிலர்

மேற்கொண்ட சிரமமான பேச்சவார்த்தைகளையடுத்து வெள்ளைக்கொடியோடு சரணடைய வந்த எல்.ரி.ரி.ஈ.தலைவர்கள் பாதுகாப்புச் செயலாளரின் பணிப்பின் கீழ் சுட்டுக்கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. பொன்சேகா இதனை நிச்சயப்படுத்திக்கூறியதாக தெரிவிக்கப்பட்டிருந்தபோதிலும், இச்செய்தியை நன்கு ஆராய்ந்தபோது, அவர் உண்மையில் அப்பகுதியில் இராணுவத்தினருடன் உடனிருந்த பத்திரிகையாளர்கள் வழங்கிய தகவல்களை மையமாக வைத்தே அதனைக் கூறியிருந்தமையை அறியமுடிந்தது.

யுத்தவெற்றிக்குப் பின்னரான காலப்பகுதியில் பகிரங்கப்படுத்தப்பட்ட இவ்விடயம் மக்களாதரவைப்பொறுத்தவரை ஜனாதிபதித் தேர்தலில் பொன்சேகாவுக்கு பின்னடைவை ஏற்படுத்துவதாகவே காணப்பட்டது. ஜனாதிபதி ராஜபக்ஷ 2010 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில், இலகுவான வெற்றியைப் பெற்றிருந்தபோதிலும் அவரது குடும்பம் முன்னாள் இராணுவத்தளபதியை பழிவாங்க முனைந்ததோடு, அவருக்கு எதிராக பல்வேறு வழக்குகளையும் தொடுத்து அவரைக் கைது செய்திருந்தது.

2010 ஆம் ஆண்டு அக்டோபர் ஜான்ஸ்,பொன்சேகாவுக்கு எதிராக இராணுவ சட்டத்தின் கீழ் தொடரப்பட்ட வழக்கில் சாட்சியமளித்தார். இவ்வழக்கு வெள்ளைக்கொடி விவகாரம் என அறியப்பட்டது. தனது செய்திமூலமொன்றுக்கு எதிராக தனது பத்திரிகையில் தனது பெயருடன் எழுதிய விடயம் தொடர்பாக சாட்சியமளித்த பத்திரிகை ஆசிரியர் பற்றியதாக ஊடக கோட்பாடு தொடர்பில் பல கேள்விகள் எழுந்திருந்தன. முன்னாள் இராணுவத்தளபதிக்கு எதிரான வழக்கில் வெள்ளைக்கொடி சம்பந்தப்பட்ட பேட்டி விபரங்களை உள்ளடக்கிய தமது குறிப்புப் புத்தகத்தை கையளித்து தமது சாட்சியத்தை நிரூபிப்பதில் அவர் ஆர்வமாக இருந்தார்.

அவரது இந்நடவடிக்கை பொன்சேகாவை இராணுவச்சட்டத்தின் கீழ் நவம்பர் 2011 ஆண்டு குற்றவாளியாக்கியதோடு , இராணுவ தரவரிசை ஒழுங்குவிதிகளை மீறி “கட்டளைக்கட்டமைப்பை” உதாசீனம் செய்தாரென அவரைக் குற்றவாளியாக்கிவிட்டிருந்தது.

ஜுலை 2012 ஆம் ஆண்டு ஜான்ஸ் பாதுகாப்புச் செயலாளரை தொலைபேசியில் தொடர்பு கொண்டிருந்தார். அவரது உறவினர் வளர்ப்பு

நாயை சுவிற்சலாந்திலிருந்து தாயகம் கொண்டுவரும் வகையில் இலங்கையின் தேசிய விமானசேவையின் நேர நியமங்களில் மாற்றஞ்செய்யப்பட்டது தொடர்பாகக் கேட்கவே ஜான்ஸ் அவரோடு தொடர்பு கொண்டார். இந்த விசேட ஏற்பாடு காரணமாக இருபது பயணிகளின் பயண ஒதுக்கீடுகள் ரத்துச்செய்யப்பட்டன. அத்துடன் பாதுகாப்புச் செயலாளரின் அந்த வளர்ப்பு நாயை ஏற்றிவர குறித்த மார்க்கத்தில் சேவையில் ஈடுபடுத்தப்பட்ட விசாலமான விமானத்தைச் செலுத்திய விமானிக்கு, அவ்விமானத்தைச் செலுத்துவதற்கான அனுமதிப்பத்திரமும் இருந்திருக்கவில்லை. அவ்விமானச்சேவையின் சிரேஷ்ட விமானிகள் தெரிவித்த எதிர்ப்பையடுத்து அவ்விமானக்கடமை நேரத்தில் செய்யப்பட்ட மாற்றம் ரத்துச் செய்யப்பட்டிருந்தது. இது குறித்து ஜான்ஸ் பாதுகாப்புச் செயலாளருடன் மேற்கொண்ட தொலைபேசி உரையாடல் விரைந்து சூடான வாய்த்தர்க்கத்துக்கு வழிவகுத்தது. சில நாட்களின் பின்னர் ஜான்ஸ் பாதுகாப்புச் செயலாளாளருடன் தொடாபு கொண்டு சண்டேலீடர் பத்திரிகையில் அச்செய்தி வெளிவரவில்லை என்பதை தெரிவிக்க முயன்றார். அத்துடன் அவ்விகாரம் பற்றிய சில தகவல்கள் கேள்விக்குரியவையாகவும் இருந்தன. அச்சமயம் பாதுகாப்பச் செயலாளர் மீளவும் ஆத்திரத்தோடு தகாதவார்த்தைகளைப் பிரயோகித்தார். அடுத்துவந்த வாரத்தில் த சண்டேலீடர் பத்திரிகை இருதரப்பிலும் பரிமாறப்பட்ட வார்த்தைப் பிரயோகங்களை முழுமையாகப் பிரசுரித்து. பலரதும் கவனத்தை ஈர்த்திருந்தது.

இந்த நிலபர அறிக்கை பிரசுரத்துக்காக தயாரானபோது, த சண்டேலீடர் பத்திரிகைக்கு பத்திரிகைக்கவுன்ஸிலினால் ஒரு பணிப்புரை விடுக்கப்பட்டிருந்தது. அதில் அச்செய்தி தொடர்பாக மனிப்புக்கோரும்படி கேட்கப்பட்டிருந்தது.அச்செய்தி பாதுகாப்பச் செயலருக்கு களங்கத்தை ஏற்படுத்தியிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. இது உண்மையானால் நீண்டகால அடிப்படையில் இலங்கையின் ஊடகத்துறை மீது அழுத்தங்களைக் கொண்டு வரும் இலங்கை பத்திரிகை கவுன்ஸிலின் ஒரு நடவடிக்கையாகவே இது காணப்படுகின்றது.

இவ்வாறு உருவாகிவரும் அபாயகரமான சூழலைக் கருத்திற்கொண்டு,

இலங்கையின் ஊடக சமூகம் செய்திப்பத்திரிகைத்துறையினால் உருவாக்கப்பட்ட சுயமுறைப்பாட்டுக்குழுவான இலங்கைப் பத்திரிகைக் கவுன்ஸிலின் நடவடிக்கைகளை மீளவும் செயற்படுத்துவதில் ஆர்வங்காட்ட ஆரம்பித்துள்ளன. இந்த அமைப்பு உரிய நிதி உதவிகள் இல்லாமையால் செயலிழக்கும் அபாயத்தையும் எதிர்நோக்கியுள்ளது.

ஆயினும் இந்த அமைப்பின் தற்போதைய நிர்வாகத்தை மேற்கொள்ளும் இலங்கைப் பத்திரிகைக் கவுன்ஸில் இதனை தொடர்ந்தும் இயங்கச்செய்து அதன் முக்கியத்துவத்தையும் மீளமைக்கவைப்பதில் சாதகமான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது.

இலங்கைப் பத்திரிகை நிறுவனத்தை சர்வதேச தரத்திலான ஒரு பயிற்சி மையமாக சகலவிதத்திலும் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய,தகுந்த சான்றுரிமைப்பத்திரங்களுடன், உருவாக்கும் திட்டங்கள் நம்பத்தகுந்தவையாக காணப்படுகின்றன. ஆயினும் ஊடகத்துறையினதும்,விரிவான சிவில் சமூக அமைப்பினதும் நிபந்தனையற்ற ஆதரவின்றி இத்திட்டம் வெற்றியளிக்கமுடியாது. இதற்கு மாறுபாடான நடவடிக்கை, ஊடக சுதந்திரத்தை பலவீனப்படுத்துவதோடு,தேசிய நல்லணக்கத்தையும் பாதிப்படைய வைப்பதாக அமையும்.

**நன்றியுரை**

இந்த அறிக்கை சர்வதேச பத்திரிகைச் சம்மேளனம் இலங்கையில் அதன் பங்காளிகளுடன் தொடர்ச்சியாக மேற்கொண்ட நடவடிக்கைகளின் வெளிப்பாடாக அமைந்துள்ளது. சர்வதேச பத்திரிகை சம்மேளனத்தின் (IFJ) தெற்காசிய இணைப்பாளர் சுகுமார் முரளிதரன், 2012 ஆம் ஆண்டு செப்டெம்பர் இறுதிப்பகுதியில் இந்த அறிக்கைக்கான தகவல்களைப் பெறச்சென்றிருந்தார். சுதந்திர ஊடக அமைப்பைச் சேர்ந்த ஷர்மினி பொயில் மற்றும் சுனில் ஜயசேகர வழங்கிய பங்களிப்பு மிகவும் பாராட்டுக்குரியதாகும். இவைதவிர கீழே தனிநபர்களிடமிருந்தும் அவர்கள் சார்ந்த நிறுவனங்களிடமிருந்தும் உள்ளார்ந்த தகவல்களைப் பெறுவதில் பேருதவிகள் கிடைத்திருந்தன.

டில்ருக்ஷி ஹந்துநெத்தி சிரேஷ்ட பிரதி ஆசிரியர் சிலோன்ருடே

ஹனா இப்ரஹிம்,சிலோன்ருடே.

இம்ரான் புர்கான்,சிரேஷ்ட நிர்வாகி இலங்கை பத்திரிகை நிறுவனம்.

ஜே. சி. வெலியமுன, சட்டத்தரணி மற்றும் மனித உரிமை செயற்பாட்டாளர்.

கமல்லியனாராச்சி, இலங்கைப் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு.

குமார் நடேசன், தலைவர் இலங்கை பத்திரிகை நிறுவனம்.

லஸந்த ரகுநாகே, இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம்

மங்கள சமரவீர, பாராளுமன்ற உறுப்பினர் ஐக்கிய தேசியக்கட்சி.

எம். ரி. எம் . முஸ்ஸமில் இலங்கை முஸ்லிம் மீடியா போரம்

என் . எம் . அமீன், ஆசிரியர் நவமணி, ஏற்பாட்டாளர் இலங்கை முஸ்லிம் மீடியா போரம்.

ரங்க ஜயசூரிய இலங்கை பத்திரிகையாளர் சங்கம்.

ரணில் விக்கரமசிங்க, பாராளுமன்ற உறுப்பினர் ஐக்கியதேசியக்கட்சி

ருக்கி பெர்னாண்டோ, மனித உரிமை நடவடிக்கையாளர்.

சன்ஜன ஹத்தொட்டுவ, ஆசிரியர், கிரவுன்ட் வியுஸ்.

ஷான் விஜேதுங்க, டிரான்ஸ் பெரன்ஸி இன்டர்நஷனல்.

ரி .பிரேமானந்தன்,ஆசிரியர் உதயன்.

திஸங்க சுமதிபால,தலைவர் லக்பிம குழுமம்.

உதயா களுவித்தாரண, மனித உரிமை நடவடிக்கையாளர்.

வில்லியம் சுகுமார் ரொக்வூட், இலங்கை பத்திரிகை கவுன்ஸில்.